Register No. | | | | | | | | |

**TA4D**

**5622–23**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2023.

(Three-year Regular Course)

Second Year – Fourth Semester

INTERNATIONAL LAW

Time : 2 ½ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Examine how far custom has been accepted as a source of International Law by the ICJ.

   பன்னாட்டு நீதிமன்றம் நாட்டிடைச் சட்டத்தின் மூலாதாரமாக வழக்காற்றை எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்கிறது என ஆராய்க.

2. Explain the various modes of acquiring and losing state territory.

   ஆள்நில எல்லைகளை அடையும் மற்றும் இழப்பதற்கான வழிமுறைகளை விளக்குக.

3. 'The Law of seas has undergone a sea change in International Law". – Examine.

   "பன்னாட்டு சட்டத்தில் கடல்களைப் பற்றிய சட்டத்தைப் போல் வேறு எந்த சட்டமும் பெருமாற்றம் பெறவில்லை"- ஆராய்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Briefly narrate the development in International Law regarding outer space.

   அண்டவெளி தொடர்புடைய நாட்டிடைச் சட்டத்தின் வளர்ச்சியைப் பற்றி சுருக்கமாக விவரிக்கவும்.

5. "States remain the principal subjects of International Law". Examine.

   "நாடுகள் நாட்டிடைச் சட்டத்தின் முக்கிய அம்சமாக இருக்கின்றன"- ஆராய்க.

6. What are the conditions to be satisfied before extraditing a criminal?

ஒரு குற்றவாளியை மீட்டொப்படைத்தல் செய்வதற்கு முன் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் யாவை?

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Pacta Sunt Servanda

பேக்டா சன்ட் சர்வண்டா

(b) Functions of Consuls

வணிகத் தூதுவர்களின் பணிகள்

(c) Asylum

புகலிடம் அளித்தல்

(d) Double Nationality

இரட்டை நாட்டுரிமை

(e) Protectorate State

காபந்து நாடு

(f) Security Council

பாதுகாப்பு அவை

(g) Calvo Clause

கால்வோ விதி

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. State A's embassy is situated in state 'B'. The state A's embassy officials have been attacked and committed hostage by state 'B' nationals. Some of the officials of state A's embassy were injured and were not admitted in hospital. Whether state 'B' is responsible for the acts of its nationals to state 'A'? Decide with ICJ case laws.

'ஆ' நாட்டில் 'அ' நாட்டின் தூதாண்மை அலுவலகம் அமைந்துள்ளது. 'ஆ' நாட்டினர் 'அ' நாட்டின் தூதாண்மை அலுவலர்களை தாக்கியும் மற்றும் பிணையகைதிகளாக பிடித்துவிட்டனர். இதில் 'அ' நாட்டின் தூதாண்மை அலுவலர்களுக்கு காயத்தையும் ஏற்படுத்திவிட்டனர் மற்றும் அவர்களை மருத்துவமனையில் அனுமதிக்கவும் இல்லை. இதில் நாடு 'அ'வுக்கு 'ஆ' நாட்டினர் செய்த செயலுக்கு 'ஆ' நாடு பொறுப்பாகுமா? என்பதை சர்வதேச நீதிமன்றத்தின் வழக்குகளுடன் தீர்மானிக்க.



9. Mr. 'X' was 'A' a revolutionary of State 'A'. He was being transported to State 'A' for the purpose of his trial on a charge of treason and abetment of murder. During his voyage, he dramatically escaped by jumping into the sea. But he was apprehended by State 'B's police. State 'B's police handed over him to captain of State 'C's ship. The authorities of the State 'B' demanded the State 'C' to return him because the rules concerning extradition were not observed and not followed under the rules of International law. Will State 'B' succeed? Decide with help of case laws.

திரு. 'X' 'அ' நாட்டின் புரட்சிகர அமைப்பைச் சார்ந்தவர். அவர் புரிந்த குற்றங்களான தேச துரோகம் மற்றும் கொலை செய்ய தூண்டினார் என்ற குற்றச் சாட்டுகளுக்கான விசாரணைக்காக 'அ' நாட்டிற்கு கொண்டு செல்லும்போது வியத்தகுமுறையில் கடலில் குதித்து தப்பிவிட்டார். அவரை 'ஆ' நாட்டு காவல் அதிகாரி பிடித்து 'இ' நாட்டு கப்பலின் தலைவரிடம் ஒப்படைத்து விட்டார். 'ஆ' நாட்டு அதிகாரம் பெற்ற அலுவலர்கள், மீட்டொப்படைத்தல் குறித்த சர்வதேச சட்ட விதிகள் பின்பற்றப்படவில்லையெனக் கூறி, திரு. 'X' ஐ மீண்டும் தங்களிடம் ஒப்படைக்கும்மாறு 'இ' நாட்டைக் கேட்டுக் கொண்டனர். இதில் 'ஆ' நாடு வெற்றி பெறுமா? தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் தீர்மானிக்கவும்.

10. State 'Y' government had sought to establish the international responsibility of State 'Z' in the ICJ for armed activities that had occurred on the territory of State 'Y'. The State "Z" did not consent to the jurisdiction of ICJ. The state "Y" has sought to establish the jurisdiction of the ICJ on the basis of Article IX of the Genocide Convention, 1948. However, the State "Z" argued that it had signed the said convention with reservation in relation to the provisions concerning ICJ's jurisdiction. Decide the legality of reservation made by the State 'Z' in relation to ICJ's jurisdiction with decided ICJ's case laws.

'Z' நாட்டின் எல்லைக்குள் நடந்த இராணுவ நடவடிக்கைக்காக 'Y' நாட்டை சர்வதேச பொருப்புள்ளாக்குவதற்காக 'Z' நாடு சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தது. ஆனால் 'Z' நாடு சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு எந்தவித இசைவும் கொடுக்கவில்லை. அதற்காக 'Z' நாட்டை சர்வதேச நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் கொண்டு வருவதற்காக 'Y' நாடானது இனவெறி ஒழிப்பு சாசனத்தின் ஷரத்து IX ன் படி 'Z' நாடானது சர்வதேச நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் வரும் என வாதிட்டது. இருப்பினும் 'Z' நாடானது இனவெறி ஒழிப்பு சாசனத்தின் வகையம் சர்வதேச நீதிமன்றத்தின் பொருந்தும் தன்மைக்கு ஒதுக்கீடு செய்துள்ளதாக எதிர்வாதம் புரிந்தது. சர்வதேச நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்கு பொருந்தும் தன்மையை மேற்படி சாசனத்திற்கு எதிராக ஒதுக்கீடு செய்தது சரியானதா என்பதை சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பின் வழிக்கொண்டு தீர்மானிக்கவும்.